சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 138/2022**

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியமாகிய **ரேவதி PW1** வாக்குமூலம் 1869 ஆம் ஆண்டின் 44வது சட்ட விதிகளின் படி / ஏற்பாட்டின்படி திரு.கே.சீனிவாசன், எம்.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதி நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **பெயர்** | **ரேவதி** | கிராமம் |
| வயது | | தாலுக்கா |
| தகப்பனார் பெய ர் | | ஜாதி |
| கணவர் பெயர் | | சமயம் |
| தொழில் | | |

25.11.2024

**முதல் விசாரணை**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதில் உள்ளது எனது கையெழுத்துத்தான். இதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். வாதி 1ம் பிரதிவாதி மீது தந்த புகார் மீது சிசி.545/2022 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 31.05.2022 தேதியிட்ட 1ம் பிரதிவாதி நாகப்பட்டினம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் சிசி.545/2022 வழக்கில் அபராதம் செலுத்தியதற்கான உத்தரவு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 01.07.2022 தேதியிட்ட வாதி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீது மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டைகளுடன் கூடியது அலுவலக நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

09.07.2022 தேதியிட்ட 1ம் பிரதிவாதி கொடுத்த பதிலறிவிப்பு சார்வு நகல் **வா.சா.ஆ.4** ஆகும். 19.07.2022 தேதியிட்ட வாதி 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய ரீஜாயிண்டர் அறிவிப்பு அஞ்சல் ரசீதுகளுடன் கூடியது அலுவலக நகல் **வா.சா.ஆ.5** ஆகும். வாதி அனுப்பிய ரீஜாயிண்டர் அறிவிப்பை 1ம் பிரதிவாதியும், அவரது வழக்கறிஞரும் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை எண்ணிக்கை – 2 அசல் **வா.சா.ஆ.6** ஆகும். எனது வழக்கை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை** .

(பிரதிவாதிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது)